# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 219/மாநகராட்சி/2018**

**நாள் : 23/10/2018**

**திரு K. பழனிச்சாமி,**
**திண்டுக்கல்.** – **முறையீட்டு மனுதாரர்**

**மாநகராட்சி ஆணையர்,**
**திண்டுக்கல் மாநகராட்சி,**
**திண்டுக்கல்.** – **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாநகராட்சி, செல்லாண்டியம்மன் கோவில், வடக்குத் தெருவில் வசிக்கும் திரு K. பழனிச்சாமி அவர்களின் 12.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.10.2018 அன்று பெறப்பட்டு 219/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்பட்டது.

## ஆணை

திண்டுக்கல் மாநகராட்சி, செல்லாண்டியம்மன் கோவில், வடக்குத் தெருவில் வசிக்கும் திரு K. பழனிச்சாமி என்பவர் தான் துப்புரவுப் பணியாளராக 34 ஆண்டுகள் பணியாற்றி பணி ஓய்வு பெற்றதாகவும், தனக்கு கடந்த 8 ஆண்டுகளாக குறைவான ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளதுடன், தனது பணிப்பதிவேட்டை உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறைக்கு அனுப்பி வைத்தால், தனக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் திருத்தி அமைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரரின் ஓய்வூதியத்தை முழுமையாகக் கணக்கிட்டு வழங்க உரிய ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் துப்புரவுப் பணியாளர் பணியிலிருந்து 30.06.2009 நாளிட்ட திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் செயல் முறைகள் எண்.13001/08/எச்.4–இல் 30.06.2009 பிற்பகல் முதல் நகராட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டுள்ளார். முறையீட்டு மனுதாரருக்கு P.P.O. எண்.21762–இல் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பலன்கள் வழங்கி

ஆணையிடப்பட்டுள்ளது. இந்நேர்வில் 03.12.2009 நாளிட்ட திண்டுக்கல் நகராட்சி 11896/09/ B2 எண்ணிட்ட கடிதத்தில் ஓய்வூதியம் வழங்க அனுமதி வழங்கக்கோரும் கருத்துரு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மேற்படி ஆணையில் தெரிய வருகிறது. எனவே, இந்நேர்வில், மனுதாரருக்கு வழங்கக் கோரிய ஓய்வூதியப் பலன்கள் சரியாக கணக்கிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து அதனை மனுதாரருக்கு தெரிவிக்க அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 23–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு K. பழனிச்சாமி,
   செல்லாண்டியம்மன் கோயில் வடக்குத் தெரு,
   திண்டுக்கல்

2. மாநகராட்சி ஆணையர்,
   திண்டுக்கல் மாநகராட்சி,
   திண்டுக்கல்

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி